வேலூர் மாவட்டம்

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: திரு. க. முனுசாமி, M.A., M.Sc., MBA., B.Ed., M.Phil.,**

**ந.க. எண்.1735/MS/மாஒ6/ஒபக/2022.நாள் : 04.01.2023.**

**பொருள்** : வேலூர் மாவட்டம் - ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - மாதிரி பள்ளி - தெரிவு செய்து ஒப்புதல் தெரிவித்த மாணவர்கள் மாதிரி பள்ளியில் சேருதல் - மாவட்ட ஆட்சியர் உடனான அறிமுகக் கூட்டம் நடத்துதல் - சார்பு.

**பார்வை** : சென்னை–06, மாநில திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4813/A11/MS/SS/2021-22, நாள்:28.12.2022.

*******

பார்வையில் காணும் சென்னை-06, மாநில திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகளுக்கிணங்க "அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் கல்வி நுண்கலை மற்றும் விளையாட்டுகளில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு ஏதுவாக சிறப்பு திட்டமாக மாதிரி பள்ளிகள் உருவாக்கப்படும்" என அறிவிக்கப்பட்டு அதனை செயல்படுத்தும் விதமாக "2022-23 ஆம் கல்வியாண்டில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை வேலூர் மாவட்டம் உட்பட 15 மாவட்டங்களில் 17 மாதிரி பள்ளிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது". நம் வேலூர் மாவட்டத்தில், பிள்ளையார்குப்பம், GGR பொறியியல் கல்லூரி வளாகத்தில் அரசு மாதிரி பள்ளி இயங்கி வருகிறது. மாதிரி பள்ளி தொடங்கப்பட்டு 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்புகள் நடைபெற்று வருகிறது. தற்போது "2ஆம் கட்ட பட்டியலின் படி அறிவியல் பிரிவில் சேர மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர்". தேர்ந்தெடுக்கப்பட்ட மேல்நிலை முதலாம் ஆண்டு ஆங்கில மற்றும் தமிழ் வழி மாணவர்கள் தங்கள் பெற்றோருடன் 03.01.2023 செவ்வாய் அன்று மதியம் 02.00 மணிக்கு வேலூர், சத்துவாச்சாரி, ஹோலி கிராஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டு ஒப்புதல் தெரிவித்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக ஒப்புதல் தெரிவித்த மாணவர்களுக்கு வகுப்புகள் தொடங்கப்படுவதற்கு முன் அம்மாணவர்கள் அனைவரையும் ஒருசேர மாவட்ட ஆட்சியருக்கு அறிமுகப்படுத்தி, மாவட்ட ஆட்சியரின் அறிவுரைகளை பெறும் பொருட்டு 06.01.2023 அன்று காலை 10.00 மணியளவில் வேலூர் மாதிரி பள்ளி, GGR பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு மாணவர்களின் மாற்றுச் சான்றிதழ் மற்றும் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் வழங்கி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் இத்தகவலை பெற்றோர்களுக்குத் தெரிவித்து மாணவர்களுடன் கூட்டத்தில் பங்கேற்க செய்தல் வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் சார்ந்த தலைமை ஆசிரியர்களே பொறுப்பேற்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு : தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல்.**

04/01/23

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

04/01/2023

பெறுநர்:

1. சார்ந்த அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
2. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொ).

நகல்:

1. சென்னை 6 மாநில திட்ட இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
3. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக்கல்வி) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
4. தலைமை ஆசிரியர், மாதிரி பள்ளி, GGR பொறியியல் கல்லூரி வளாகம், வேலூர்.

https://d.docs.live.net/6e990bc6c47f10ce/Desktop/DPO - DC 6/Elite Model School - GGR...